Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 34/2023**

**2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | பவித்ரா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | ராஜராம் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | சங்கிலிரோடு பேக்ட்ரி டிவிசன் | வயது | - | 27 |
| சாதி | - | - | | | |

**22-11-2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

**1.** நான் சங்கிலிரோடு பேக்ட்ரி டிவிசனில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 24.05.2023-அன்று மதியம் 03.00 மணி சங்கிலிரோட்டிலுள்ள வீட்டு வாசலில் நடந்தது. எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் உள்ள ஆஜர் எதிரி தர்மலிங்கம் என்னுடைய மாமனாரின் பெயரைச் சொல்லி அவருடை பொண்டாட்டி பெயரையெல்லாம் சொல்லி அவளுங்க புருசனுங்க யாருமே ஓக்குற தகுதியில்ல. அவங்க கொட்டைகள அறுத்துட்டு சும்மா இருக்கனும் என்று சொன்னார்.

2. நான் உடனே என் மாமனாருக்கு போன் செய்து வீட்டிற்கு வரச்சொன்னேன். மாமா உங்கள தாத்தா பேருகள, அத்த பேருகள சொல்லி அசிங்கமாக பேசுகிறார் என்று சொன்னேன். அவர் வந்தவுடன் தர்மலிங்கத்திடம் கேட்டார். எதுக்கு என் பொண்டாட்டிகளையெல்லாம் அப்பாவையும் அசிங்கமா பேசுற என்று கேட்டார். அதற்கு அப்படிதான் பேசுவேன் என்று தர்மலிங்கம் சொன்னார்.

3. அப்புறம் என் வீட்டுக்காரர் சத்தம் கேட்டு வெளியில் வந்தார். முதல் நாள் தண்ணிபோட்டு வந்து என் வீட்டுவாசலில் வந்து நைட்டில் தூங்கவிடாமல் அசிங்கஅசிங்கமாக பேசினார். 24ம் தேதி காலையில் என் வீட்டுக்காரரும் மாமனாரும் தர்மலிங்கம் தண்ணிபோட்டு வந்து லைன்சுக்குள்ள தூங்கவிடாம தொந்தரவு பண்றார்னு பேக்ட்ரிகுள்ள போய் சொல்லியாச்சு.

4. பேக்ட்ரியில் வேலையிலிருந்து தர்மலிங்கத்தை நிப்பாட்டிட்டாங்க. தர்மலிங்கம் வீட்டிற்கு வந்து எங்க மாமனாரையும் வீட்டுக்காரர் பெயரைச் சொல்லி இவனுங்கதான் என் வேலையை நிப்பாட்ட காரணம் இவனுங்கள நான் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார். இந்த காரணத்தை

முன்னாடியே சொல்லிவிட்டார்.

5. மதியம் 3.00 மணிக்கு பிரச்சனை நடக்கும்போது என் மாமனார் வந்தார். எதுக்கு இப்படி என் பொண்டாட்டி, என் அண்ணன் பொண்டாட்டியும் எதுக்கு பேசின என்று கேட்டார். நீங்கதானடா என் வேலைய நிப்பாட்டினிங்க என்று சொல்லி வெளியில் வந்து சத்தம் போட்டார். அங்கிருந்து கத்திஎடுத்து வந்து குத்தவந்த நேரத்தில் கீழே விழுந்துவிட்டார்.

6. கீழே விழுந்தவுடன் என்னை பார்த்து உன்னை நான் ஓக்காமா விடமாட்டேன்டீ என்று சொன்னார். என் வீட்டுக்காரர் வந்து எதுக்கு என் பொண்டாட்டிய பேசின என்று கேட்டார். நான் அப்படிதான் பேசுவேன் என்று சொன்னார். இடுப்பிலிருந்த பாக்கெட்டிலிருந்த கத்தியை எடுத்து வேகமாக போய் என் மாமனாரைக் குத்திவிட்டார். அதில் என் மாமனாரின் வலது புஜத்தில் காயம் ஏற்பட்டது.

7. அந்த கத்தியைப் பார்த்தால் என்னால் அடையாளம் கட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள கத்திதான் அது. **அந்த கத்தி சா.பொ. 1 ஆகும்.** என் மாமனாருக்கு காயம் ஏற்பட்டவுடன் பக்கத்திலிருந்த ஒரு அக்கா ஈரத்துணி எடுத்து கையில் கட்டிவிட்டார். உடனே கம்பெனி ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போனோம். அவங்க பன்னிமேடு ஆஸ்பிட்டலுக்கு அனுப்பிவிட்டார்கள்.

8. அங்கு டாக்டர் ரத்தத்தை மட்டும் கிளின்பன்னிவிட்டு வால்பாறை GH-க்கு அனுப்பிவைத்தார். அங்கு டிரிட்மன்ட் பார்த்தோம். 25-ம் தேதி 11.00- மணி இருக்கும் S.I சார் வந்து என்ன நடந்தது என்று விசாரித்தார். நடந்த உண்மையெல்லாம் சொன்னோம். என்னிடம் கம்பளைண்ட் எழுதி வாங்கினார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.